[2013 மார்ச் 26

வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

## விடுதி

***5422 திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், காடாம்புலியூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக மாணவ, மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாழும் வள்ளல், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உயிர்நாடியாக, ஒளிவிளக்காகத் திகழும் மனிதநேயம் மிக்க தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான அனைத்து விடுதிகளும் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து, இன்றுள்ள சூழ்நிலையில் மொத்தம் உள்ள 1,294 விடுதிகளில் ஆயிரம் விடுதிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணையால் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதம் உள்ள 294 விடுதிகளில் 226 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி கட்டுமானப் பணிகள் நடை பெற்று வருகின்றன. இந்த விடுதிகளும் விரைவில் பணி முடிந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு, இது மாண்புமிகு அம்மா அவர்களின் மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மார்ச் 26]

பண்ருட்டி ஒன்றியம், காடாம்புலியூரில் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றது. ஆகவே, காடாம்புலியூரில் மாணவியர் விடுதி கட்டும் வினா எழாது. மேலும், காடாம்புலியூரில் மாணவ—மாணவியர் விடுதி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்களின்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 270 சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் (Community Borewells) அமைப்பதற்கு ரூ.11 கோடி வழங்க ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற பகுதியாகும். இந்தப் பகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,200 மாணவ மாணவியர்கள் படித்து வருகின்றார்கள். இந்தப் பகுதிகளில் இருக்கின்ற மாணவர்களின் நலன் கருதி அரசு ஆண்கள் விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் இடத்தில் மாணவர் விடுதி கண்டிப்பாகத் தேவைப்படுமென்றால், எதையும் கேட்காமலே மக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களைத் தீட்டும் எங்கள் பொன்மனத் தாய் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**75—**

### தங்கும் அறைகள்

**3961—முனைவர் கோவி. செழியன்:*

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவிடைமருதூர் தொகுதி, கஞ்சனூர் அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் அறைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கஞ்சனூர் அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் மூன்றாம் நிலை செயல் அலுவலராலும், மதுரை ஆதீனம் அவர்களைப் பரம்பரை அறங்காவலராகக் கொண்டும் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் நவக்கிரக*